# ஜெர்மன் வாழ் தமிழர்கள் சந்திப்பு : முதல்வர் வேண்டுகோள்... முதல் பக்கத் தொடர்ச்சி

U.A.E, ஜப்பான், ஸ்பெயின், சிங்கப்பூர், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கெல்லாம் பயணத்தை மேற்கொண்டு ஏராளமான முதலீடுகளைத் தமிழ்நாட்டை நோக்கி ஈர்த்து, நம்முடைய மக்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம்.

இப்படி வெளிநாடுகளுக்கு வரும்போது, முதலில் எனக்குள் என்ன தோன்றுகிறது என்றால், இந்த நாட்டில் வாழுகின்ற நம்முடைய தமிழர்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்களுடைய வாழ்க்கைத்தரம் எந்தளவுக்கு உயர்ந்திருக்கிறது? பெரும் பாடுபட்டு தலைநிமிர்ந்த இந்த இனம், இந்த மண்ணில் சுயமரியாதையுடன் நடைபோடுவதை பார்க்க வேண்டும் என்று நான் நினைப்பேன்.

அதிலும் முக்கியமாக, ஒரு அயலக மண்ணில், நம்முடைய தமிழைக் கேட்கவேண்டும் என்ற ஆசை எனக்கு வந்துவிடும். எல்லோருக்கும் அப்படிதான். அதனால்தான், ஜெர்மனிக்கு வந்தவுடனே முதலில் உங்களை சந்திப்பதற்கு வந்துவிட்டேன்.

### அயலகத் தமிழர்களுக்காக ஏராளமானத் திட்டங்கள்!

இப்போது உங்களுடைய ஆரவாரத்தை கேட்கும்போது மகிழ்ச்சியை பார்க்கும்போது, நொடியில் தமிழ்நாட்டிற்கு டிராவல் செய்த உணர்வு ஏற்படுகிறது.

மனிதன் எங்கே சென்றாலும், அவனுடைய வேர் இருக்கின்ற தாய்நிலத்தை மறக்க மாட்டான். அப்படித்தான் உங்களுடைய நினைப்பும், எப்போதும் தமிழ்நாட்டின் மீதே இருக்கும். தமிழ்நாட்டில் இருக்கின்ற நாங்களும் உங்களை அன்போடு பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் நம்முடைய திராவிட மாடல் அரசில், அயலகத் தமிழர்களின் நல்வாழ்வுக்காக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஆண்டு மட்டும், இந்த அயலகத் தமிழர் நாள் விழாவுக்கு எத்தனை நாடுகளில் இருந்து நம்முடைய தமிழர்கள் சென்னைக்கு வந்திருந்தார்கள் தெரியுமா? 62 நாடுகளிலிருந்து வந்தார்கள்! சொந்த மண்ணில் கால் வைத்தபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சியைப் பார்த்து அதை நான் ரசித்தேன் - புளகாங்கிதம் அடைந்தேன் - பூரிப்படைந்தேன்.

அடுத்து, அயலகத் தமிழர் நலவாரியம். அயலகத் தமிழர்களுக்கான டோல்ஃப்ரீ ஹெல்ப்லைன், அதேபோன்று புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கு சுழல் நிதி, தமிழ்நாட்டுக்கு வெளியே வாழுகின்ற தமிழர்களுக்கு இன்ஷூரன்ஸ் என்று ஏராளமான திட்டங்களை செய்து கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்று, எதிர்பாராதவிதமாக உயிரிழக்க நேரிடுகிறவர்களின் குடும்பத்திற்கு, நிதியுதவியும், பென்ஷனும் வழங்குகிறோம்.

### வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு ஓடோடி வந்து உதவுகிறோம்!

இப்படி பார்த்து பார்த்து செய்து தருவதுடன், வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் ஓடோடி வந்து உதவுகிறோம்.

இதற்கு சில எடுத்துக்காட்டுகளை நான் சொல்ல விரும்புகிறேன்...

**உக்ரைன் நாட்டில் இருந்து ஆயிரத்து 524 மாணவர்கள், சூடானில் இருந்து 253 பேர், இஸ்ரேலில் இருந்து 126 பேர், வங்கதேசத்தில் இருந்து 220 பேர், கம்போடியா, தாய்லாந்து, மியான்மர் ஆகிய நாடுகளிலிருந்து 119 பேரை மீட்டு வந்திருக்கிறோம்.**

**அதுமட்டுமல்ல, இன்னும் சில நெகிழ்ச்சியான சம்பவங்களையும் உங்களிடம் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்...**

**காஞ்சிபுரத்தைச் சேர்ந்த மனோஜ் என்பவர், அமெரிக்காவில் இருந்து சென்னை வரும்போது, அவருடைய குழந்தை சந்தியாவுக்கு நடுவானில் கடுமையான உடல்நலக் குறைவு ஏற்பட்டது. உடனே விமானத்தை, இஸ்தான்புல்லில் தரையிறக்கினார்கள். அந்தக் குழந்தையை மேல் சிகிச்சைக்காக சென்னைக்கு அழைத்துக் கொண்டு வர 10 இலட்சம் ரூபாய் வழங்கினோம்.**

**மயிலாடுதுறையைச் சேர்ந்த முபாரக் அலி என்பவருக்கு தாய்லாந்தில் உடல்நலக்குறைவு ஏற்பட்டபோது 10 இலட்சம் ரூபாய் செலவில், சென்னைக்கு அழைத்துக் கொண்டு வந்து சிகிச்சை அளித்தோம்.**

**குவைத் தீ விபத்தில் சிக்கிய 7 தமிழர்களுடைய உடலை மீட்டு ஒப்படைத்து, அந்த குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபாய் வழங்கினோம்.**

**இரண்டாம் உலகப் போரில் போர் கைதிகளாக இருந்து மறைந்த தமிழர் நினைவாக, தாய்லாந்தில் நடுகல் அமைக்க 10 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம்.**

### உங்களை ஆதரிக்க எப்போதும் தயார்!

இதையெல்லாம் நான் குறிப்பிட்டு சொல்லக் காரணம், தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசும், உங்கள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும் உங்களை ஆதரிக்க, அரவணைக்க எப்போதும், எந்த நேரத்திலும், எந்த சூழ்நிலையிலும் இருப்போம் என்று சொல்லத்தான் அதைக் குறிப்பிட்டுச் சொன்னேன். இதை கேட்கும்போது வெளிநாடுகளில் அல்லல்படுகின்ற யாராவது ஒருவருக்கு நம்பிக்கை பிறக்கும்; அவர்களுக்கும் உதவ நமக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று தான் சொல்கிறேன்.

> **“உலகத்தின் எந்த மூலைக்குச் சென்றாலும், தமிழன் இருப்பான்; தமிழ்க் குரலைக் கேட்கலாம்” என்று சொல்கின்ற அளவுக்கு உலகெல்லாம் பரவி, தங்களுடைய அறிவால், உழைப்பால் உயர்ந்திருக்கின்ற இனம்தான், நம்முடைய தமிழினம்! நம்முடைய இனத்திற்கான இதுதான் மிகப் பெரிய பெருமையாக விளங்கிக் கொண்டிருக்கிறது.**

இப்போது நான் சொன்ன முன்னெடுப்புகள் எல்லாவற்றையும்விட, மிக முக்கியமான திட்டம்தான், வேர்களைத் தேடித் திட்டம்!

வெளிநாடுகளிலேயே செட்டில் ஆகிவிட்ட சிலர், “மண்ணை விட்டு பிரிந்து தூர தேசத்துக்கு வந்துவிட்டோமே, இனி இந்த சொந்தம் அவ்வளவுதானா” என்று உங்களுக்குள்ளே நிச்சயம் இது ஏற்பட்டிருக்கும். அப்படிப்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்களுடைய குழந்தைகளை, மாணவர்களை நம்முடைய தமிழ்நாட்டிற்கு அழைத்துக் கொண்டு சென்று, நம்முடைய மரபின் வேர்களை அறிமுகம் செய்து கொண்டிருக்கிறோம்.

2023ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில், இதுவரைக்கும் 15 நாடுகளிலிருந்து 292 பேர் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். பலர், சில தலைமுறைகளாக விட்டுப் போன சொந்தங்களை தேடிக் கண்டுபிடித்து உருகியிருக்கிறார்கள். அவர்கள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரும், அவர்கள் மனதில் தேங்கி நின்ற பாசமும்தான் இந்தத் திட்டத்தின் நோக்கத்திற்குக் கிடைத்த வெற்றி என்று நான் நினைக்கிறேன்.

### திராவிட மாடல் அரசின் குறிக்கோள் இதுதான்!

“வாழ்வதும், வளர்வதும் தமிழும் தமிழினமுமாய் இருக்க வேண்டும்!” இதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசின் மோட்டோ! இதற்காகத்தான் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறோம்!

நம்முடைய அரசின் திட்டங்களை நாம் ஏற்படுத்தி தருகின்ற வாய்ப்புகளை நீங்கள் எல்லோரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேசமயம், உங்கள் மீது இருக்கின்ற அன்போடும், உரிமையோடும் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். எப்போதுமே எங்கேயாவது முதலமைச்சர் சென்றால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் என்னிடம் ஒரு கோரிக்கையை வைப்பார்கள். ஆனால், நான் முதலமைச்சராக இருந்து உங்களிடத்தில் இப்போது ஒரு கோரிக்கையை வைக்க வந்திருக்கிறேன். ஒன்றும் பயப்படவேண்டிய அவசியமில்லை.

உலக நாடுகளை குறிப்பாக, வளர்ச்சியடைந்த நாடுகள் எப்படி இருக்கவேண்டும் என்று பார்ப்பவர்கள் நீங்கள். இதுபோல நம்முடைய தமிழ்நாடும் வளரவேண்டும் என்று நான் நினைப்பது போலதான் நீங்களும் நிச்சயமாக நினைப்பீர்கள். என்னைவிட அதிகமாகதான் நினைப்பீர்கள். எனவே, உங்களால் முடிந்த உதவிகளைத் தொடர்ந்து உங்கள் தாய் மண்ணுக்கு நீங்கள் செய்யுங்கள் - செய்வீர்கள் - செய்து கொண்டிருப்பீர்கள்.

நீங்கள், சிறியதாக பிசினஸ் செய்து கொண்டிருந்தாலும், உங்கள் தொழிலைத் தமிழ்நாட்டிலும் தொடங்க முயற்சி செய்யவேண்டும்.

பெரிய பெரிய நிறுவனங்களில் நீங்கள் வேலை செய்கிறீர்கள் என்றால், உங்கள் நிறுவனத்தில், நம்முடைய தமிழ்நாட்டில் நிறைந்திருக்கின்ற வாய்ப்புகளைப் பற்றி எடுத்துச் சொல்லி, நம்முடைய தமிழ்நாட்டில் இன்வெஸ்ட் செய்ய மோட்டிவேட் செய்யுங்கள்.

### தமிழர் என்கிற அடையாளத்தை விடாதீர்கள்!

உங்கள் சொந்த கிராமங்களை கவனித்துக் கொள்ளுங்கள். அங்கே படிக்கின்ற நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்களுக்கு, ஏழை, எளிய மாணவர்களுக்கு உங்களால் முடிந்த கல்வி உதவிகளை செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த பூமிப்பந்து முழுவதும் நீங்கள் எங்கே சென்றாலும், தமிழர் என்ற நம்முடைய அடையாளத்தை விடாதீர்கள். உங்கள் வேர்களை மறக்காதீர்கள்; தமிழை மறக்காதீர்கள்; தமிழ் மண்ணையும், மக்களையும் மறக்காதீர்கள்!

ஆண்டுக்கு ஒருமுறையாவது தமிழ்நாட்டிற்கு குழந்தைகளுடன் வாருங்கள். தமிழ்நாட்டின் வளர்ச்சியை, மாற்றத்தைப் பாருங்கள். நம்முடைய பண்பாட்டை, வரலாற்றை, அரசியல் எழுச்சியை எடுத்துச் சொல்லும் கீழடி அருங்காட்சியகம், பொருநை அருங்காட்சியகம், கலைஞர் உலகம் என்று ஏராளமான இடங்கள் இருக்கிறது. அதையெல்லாம் நீங்கள் மட்டுமல்ல, உங்கள் குழந்தைகளுக்கும் சுற்றி காண்பித்து, நம்முடைய வரலாற்றை எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் உறவாக, உங்கள் குடும்பத்தில் ஒருவனாக, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உங்களுக்காக தமிழ்நாட்டில் இருக்கிறேன்.

குடும்பத்துடன் இங்கே வந்து, இந்த மறக்க முடியாத வரவேற்பை கொடுத்திருக்கின்ற உங்கள் எல்லோருக்கும் நன்றி! நன்றி! நன்றி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## கரூரில் கழக முப்பெரும் விழா!

# கோவை மாநகர் மாவட்டக் கழகத்தினர் பல்லாயிரவர் பங்கேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கோவை, செப். 3 -

கோவை மாநகர் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் 01.09.2025 - திங்கட்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் வடகோவை பவர் ஹவுஸ் அருகில் உள்ள கிஸ்கால் கிராண்ட் ஹோட்டல் அரங்கில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், கோவை மாநகராட்சி மேயர் கா.ரங்க நாயகி ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் கருத்துரை வழங்கினார்.

இதில் கழக சொத்துப் பாதுகாப்புக்குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, தலைமைக் கழக நிர்வாகிகள் பி.நாச்சிமுத்து, வழக்கறிஞர் பி.ஆர். அருள்மொழி, அ.தமிழ்மறை, மு.இரா.செல்வராஜ், வி.ஜி.கோகுல், எல்.பி.எப். நா.தமிழ்ச்செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.எஸ். பி.கண்ணப்பன், வே.பாலசுப் பிரமணியன், பி.ஆனந்த குமார், தொகுதி பார்வையாளர்கள் சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், கழக அயலக அணி துணைச் செயலாளர் முத்துவேல் ராமசாமி, தெற்கு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர்.மகேந்திரன், வடக்கு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் வாசிம் ராஜா முபாரக், பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந.உதயகுமார், ச.கார்த்திகேயன், இரா. மணிகண்டன், நோயல் செல்வம், எஸ்.பி.சரஸ்வதி, சங்கனூர் எஸ்.கே.ஆனந்த குமார்,

பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் சிங்கை மு.சிவா, கஸ்தூரி அருண், சிங்கை அன்பழகன், ஷேக் அப்துல்லா, ப.மோகன்ராஜ், துரை. செந்தமிழ்ச்செல்வன், ஏ.எஸ்.நடராஜ், மா.நாகராஜ், ஆர்.எம்.சேதுராமன், டெம்போ சிவா, ப. பசுபதி, இலா.தேவசீலன், மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், என்.ஜே.முருகேசன், ஆ.கண்ணன், வ.ம.சண்முக சுந்தரம், பரணி கே.பாக்ய ராஜ், பாபு, கே.எம்.ரவி, சி.இராமச்சந்திரன், ஜெயச்சந்திரன், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் இரா.தனபால், ஆர்.கே. சுரேஷ்குமார், வழக்கறிஞர் அன்புச் செழியன், ஏ.எஸ். ஜெயக்குமார், ந.பாபு, டி. கண்ணன், கராத்தே அர்ஜுனன், சஞ்சய் குமார், கனிமொழி, சத்யா கோவை தங்கம் உள்பட கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றது முதல் இதுவரை, 922 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.10.62 இலட்சம் கோடி மதிப்பிலான முதலீடுகள் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டிற்கு ஈர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 32.81 இலட்சம் பேருக்குக்கு வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்க வெளிநாட்டு பயணமாக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்குச் சென்றுள்ள கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பயணம் வெற்றி பெற கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பாக வாழ்த்துக்களையும், நன்றிகளையும் இக்கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது.

கழக முப்பெரும் விழா வருகின்ற 17.09.2025 புதன் கிழமை அன்று கரூரில் நடைபெற உள்ளது.

முப்பெரும் விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களுக்கு “பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் விருது,”

தணிக்கைக் குழு முன்னாள் உறுப்பினரும், பாளையங்கோட்டை நகர் மன்ற முன்னாள் தலைவருமான சுப.சீத்தாராமன் அவர்களுக்கு “பேரறிஞர் அண்ணா விருது”,

நூற்றாண்டு கண்டவரும், அண்ணா நகர் பகுதி முன்னாள் செயலாளரும், அண்ணா நகர் சட்டப்பேரவை தொகுதி முன்னாள் உறுப்பினருமான சோ.மா. இராமச்சந்திரன் அவர்களுக்கு “முத்தமிழறிஞர் கலைஞர் விருது”,

தலைமை செயற்குழு உறுப்பினர், குளித்தலை ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் மறைந்த குளித்தலை சிவராமன் அவர்களுக்கு, “பாவேந்தர் விருது”,

கழக ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர், காட்டுமன்னார் கோவில் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர், சட்டப் பேரவை முன்னாள் கொறடா மருதூர் இராமலிங்கம் அவர்களுக்கு “பேராசிரியர் விருது”,

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட முன்னாள் செயலாளர், முன்னாள் அமைச்சருமான பொங்கலூர் நா.பழனிச்சாமிக்கு “மு.க.ஸ்டாலின் விருது”,

நல்லாட்சி நாயகன், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், அன்புத் தளபதி அவர்கள் அனைவருக்கும் விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலில், கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் தி.மு.கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு, “சுற்றுப்புறச் சூழல், இரத்த தானம் விழிப்புணர்வு “ “மாபெரும் மாரத்தான் போட்டி” வருகிற செப்டம்பர் 14ம் தேதி அன்று காலை 6.00 மணியளவில் பீளமேடு, மசக்காளிபாளையம் சாலை, பாலன் நகர் வளைவு அருகில் தொடங்கி நடைபெற உள்ளது. இம்மாரத்தான் போட்டி பள்ளி மாணவர்களுக்கு 6 கி.மீ. தூரமும், பள்ளி மாணவிகளுக்கு 4 கி.மீ. தூரமும், கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு 10 கி.மீ. தூரமும், கல்லூரி மாணவிகள் மற்றும் பொதுமக்களுக்கு 6 கி.மீ. தூரமும், 44 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு 6 கி.மீ. தூரம் என 5 பிரிவுகளில் நடைபெற உள்ளது.

வெற்றி பெறுவோருக்கு மொத்தப் பரிசுத் தொகை 2 இலட்சம் ரூபாய், அனைத்து பிரிவிலும் முதல் 5 இடத்திற்கு பரிசுத் தொகையாக வழங்கப்படவுள்ளது. இந்த மாரத்தான் போட்டியை, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கொடியசைத்து துவக்கி வைத்து சிறப்பிக்க உள்ளார்.

இம்மாரத்தான் போட்டிகளில் ஆர்வமுள்ள மாரத்தான் வீரர்கள், இளைஞர்கள், மாணவ, மாணவிகள், பெண்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, மாரத்தான் போட்டியில் கலந்து கொள்பவர்கள், ஆன்லைன் பதிவு (https://forms.gle/PZJx9sMeAsSxY4Jm7) தற்போது தொடங்கி நடைபெற்று வருகிறது. மாரத்தான் போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு நுழைவுக் கட்டணம் இலவசம்.

மாரத்தான் போட்டியில் கலந்து கொள்ள ஆன்லைனில் பதிவு செய்தவர்கள் செப்டம்பர் 13ம் தேதி சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு பீளமேடு பாலன் நகர் கண்டியப்பன் திருமண மண்டபத்தில் டீசர்ட், BIB நம்பர் பெற்றுக் கொள்ளலாம் என்று இக்கூட்டத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

செப்டம்பர் 15,16,17 ஆகிய நாட்களில் தந்தை பெரியார் பிறந்த நாள், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், மற்றும் தி.மு.கழகம் தோற்றுவிக்கப்பட்ட நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்டம் முழுவதும் கழகத்தினர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தியும், திருவுருவச் சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கு மலர்களால் அலங்கரித்து, மரியாதை செலுத்துவது என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## சென்னை வால்டாக்ஸ் சாலையில் கட்டப்படவுள்ள

# குளிரூட்டப்பட்ட புதிய பேருந்து நிறுத்தம் அமைப்பதற்கான பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, செப். 3 -

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று முன்தினம் (01.09.2025) துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்படவுள்ள குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தத்திற்கான (AC Bus Shelter) பணியினை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பி.கே.சேகர்பாபு வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளான வால்டாக்ஸ் சாலை, ஒத்தவாடை தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தின் கட்டுமான பணிகளையும், வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு நிலையம், 844 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், விளையாட்டுத் திடல், சமூக நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் என “ஒருங்கிணைந்த வளாகம்” கட்டுமானப் பணிகளையும் மற்றும் ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் 776 புதிய அடுக்கு மாடி குடியிருப்பு களுக்கான பணிகளையும் மேயர் திருமதி.ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அரசு உயர் அலுவலர்களுடன் நேரில் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி. ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமர குருபரன், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, எம்.டி.சி. இணை மேலாண் இயக்குநர் ராகவன், பொது மேலாளர் (இயக்கம்) நெடுஞ்செழியன், தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் பாலமுருகன், உள்ளாட்சித் பிரதிநிதிகள் எஸ்.முரளி, அபாரன்ஜி, ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் தாஹா நவீன், பரிமளம், மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ. அலுவலர்கள் உடனிருந்தனர்.



தஞ்சாவூர் இராசா மிராசுதார் அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் கோரிக்கையினை ஏற்று ‘நமக்கு நாமே’ திட்டத்தின் கீழ் கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி நிறுவனம் 37.5 லட்சம் புதிய லிப்ட் அமைத்துக் கொடுத்தனர். இதனை நிதி நிறுவனத்தின் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம், மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் ச.முரசொலி எம்.பி., மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி மற்றும் மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், அரசு மருத்துவர்கள், பகுதிச் செயலாளர்கள், மண்டல குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.



கோவை மாநகர் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் வடகோவை பவர் ஹவுஸ் அருகில் உள்ள கிஸ்கால் கிராண்ட் ஹோட்டல் அரங்கில் துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், கோவை மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் கருத்துரை வழங்கினார். இதில் கழக சொத்துப் பாதுகாப்புக்குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, தலைமைக் கழக நிர்வாகிகள், பகுதி கழக பொறுப்பாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.